**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.378/2021**

**Prosecution Witness : 3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சந்தோஷ் | **Caste** | : |
| **Father's Name** | : மாரிமுத்து | **Calling** | : கூலி வேலை |
| **Village** | : குரும்பப்பட்டி | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 40/2026 |
| | | **Dated** | : 07.04.2026 |

**07.04.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 4 **திரு.சந்தோஷ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 3** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 , 2 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் குரும்பப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்துவருகிறேன். கடந்த 02.08.2020ம் தேதி ராஜேந்திரன் என்பவருக்கு நான் கடனாக ரூ.43,000 பணத்தை சங்கரின் மூலம் கொடுத்தேன். அதன் பின்பு அவரிடம் நான் கொடுத்த பணம் என்ன ஆனது என கேட்டபோது வெங்கடேஷ் மகன் சூர்யா மற்றும் வேலு ஆகியோர் சங்கரிடம் சென்று வாக்குவாதம் செய்திருக்கிறார்கள். சூர்யா , வேலு ஆகிய இருவரும் கம்பியை வைத்து சங்கரை அடித்தாக சொன்னார்கள். நான் மருத்துவமனை சென்று சங்கரைப்பார்த்தேன்.

சங்கருக்கு தலை மற்றும் உடம்பின் ஊமைக்காயங்கள் ஏற்பட்டிருந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எனது போலிசார் விசாரணையில் ராஜேந்திரனுக்கு எந்த தேதியில் கடன் கொடுத்தேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். யார் மூலமாக மேற்படி சண்டை பற்றி தெரிந்துகொண்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் எங்கு வைத்து என்னை விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் ராஜேந்திரன் என்வருக்கு பணம் ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் சம்பவம் பற்றி ஏதும் கேள்விப்படவில்லை என்றாலும் அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.04.07 10:46:38 +0530

Judicial Magistrate No.II

Dindigul.